போன்றவை அமைத்து அவர்களுடைய புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் மட்டுமல்லாது, தமிழகத்தில் வாழ்ந்த தலைவர்களுக்கு மட்டுமல்லாது, வெளிநாட்டில் இருந்து வெள்ளைக்காரராக வாழ்ந்து, இங்கே தேனி மாவட்டத்தை உள்ளடக்கிய 6 மாவட்ட விவசாய மக்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய பென்னி குயிக் அவர்களுக்கு மணிமண்டபமும், சிலையும் அமைத்து வருங்கால சந்ததிகள் தெரிந்துகொள்கின்ற வகையிலே, வரலாற்றிலே நன்றி சொல்லக்கூடிய தலைவி நான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நிரூபிக்கின்ற வகையிலே இன்றைக்கு உலகிற்கு வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆகவே, அம்மா அவர்களுடைய காலத்தில் உறுப்பினர் கோருகின்ற அந்த நூலகமானது முழுநேரம் பயன்படக்கூடிய அளவிலே செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

89—

சமுதாயக் கூடம்

***21310—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை அருள்மிகு நாடியம்மன் ஆலயத்தில் புதிய சமுதாயக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அருள்மிகு நாடியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயிலாகும் மிகவும் பிரசித்திபெற்ற

2013 மார்ச் 27]

பிரார்த்தனைத் தலமாக விளங்கும் இத்திருக்கோயில் நிர்வாகம் செயல் அலுவலர் மற்றும் தக்காரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் 1 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதற்கு முன்பாக சுமார் 60x50 = 3,000 சதுர அடி அளவில் தீப்பிடிக்காத கூரையிலான தற்காலிக மண்டபம் ஒன்று பக்தர்களின் வசதிக்காகப் போடப்பட்டுள்ளது. இம்மண்டபத்தினை நிரந்தரக் கான்கிரீட் மண்டபமாக மாற்றி அமைத்திட உபயதாரர்கள்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் மேலும் சமுதாயக் கூடம் கட்டுவதற்குப் போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் அதற்கான முன்மொழிவு ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசித்தி பெற்ற அந்தக் கோயிலிலே அதிகமான திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடம் இல்லாவிட்டாலும்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, முன்புறம் உள்ள தீப்பிடிக்காத கூரை அமைக்கப்பட்டுள்ள அந்தப் பகுதியை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். அதனை விரைந்து எடுத்து, பக்தர்கள் உதவியோடு அதனை கான்கிரீட் தளமாக மாற்றிவிட்டார்கள் என்று சொன்னால், பல்வேறு திருமண நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு அது நிச்சயமாக உதவிகரமாக இருக்கும். எனவே, அதனை விரைவில் செய்து கொடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குண்டான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.